# இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல் 2275 எஸ்ஆர்ஐ) -2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 324,131,293 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,954,191,089 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 134,289,016 | 264,433,364 | 1,329,246,730 |
| உபகரணங்களும் பொருட்களும் | 178,777,855 | 45,529,241 | 584,890,047 |
| வட்டிக் கட்டணங்கள் (துணைநிலை) | 11,064,422 | 9,680,088 | 40,054,312 |
| மொத்தம் | 324,131,293 | 319,642,693 | 1,954,191,089 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரை நிதியளிப்பு முகவரால் அறவிடப்பட்ட ரூபா 51,575,515 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் படி வட்டிச் செலவினம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2007 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட ரூபா 40,054,312 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட குறைநிரப்பு கடன் உடன்படிககையின் படி செயற்திட்டத்தின் வட்டிச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டியாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டிச் செலவினம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் முறையே ரூபா 11,521,203 மற்றும் ரூபா 51,575,515 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 49,393,223 கூட்டுமொத்தத் தொகையான இரண்டு ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தப்பட வேண்டியவைகள் பொதுத் திறசேரியிடமிருந்து எவ்வித கடப்பாட்டு அல்லது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பொதுத் திறைசேரியிடமிருற்து பெறவேண்டிய நிதிகளாகவும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்புகளாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

(அ) மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு போன்றவை ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் பட்டியலிடப்பட்ட நேர காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்துதலை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை அரசாங்கம் | மொத்தம் |
|---|---|---|---|
| உடன்பட்ட உதவுதொகை (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 13.5 | 8.0 | 21.5 |
| 2012 திசெம்பர் 31 வரை உள்ளபடியான செலவினம் (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 10.4 | 6.6 | 17.0 |
| சதவீதமாக நிதிகளின் பயன்பாடு | 77 | 82.5 | 79.1 |

(இ) நிதியளிப்புத் திட்டம், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் (காசு அடிப்படை) |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 13.5 | 1,442.66 | 176.11 | 169.36 | 1,179.66 |
| இலங்கை அரசாங்கம் | 8.0 | 902.30 | 80.30 | 71.29 | 720.81 |
| மொத்தம் | 21.5 | 2,344.96 | 256.41 | 240.65* | 1,900.47* |

* மேற்குறிப்பிட்ட தொகைகள் அட்டுறவு செலவினத்தின் தாக்கம் காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன

## 4.2 பௌதீக முன்னேற்றம்

நீர்குழாய்களை வழங்கி பொருத்துவதற்கும் நீரகற்றும் தாங்கிகளை (PE4) நிர்மாணிப்பதற்குமான ஒப்பந்தம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஹம்பாத்தோட்டை நீர் வழங்கல் திட்டத்தில் உவர் நீர்த் தடுப்பினை நிர்மாணித்தல் தொடர்பிலான ஒப்பந்தம் 2007 மே மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தம் மீள கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் பின்னர் இது 2009 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. உவர் நீர்த் தடுப்பு நிர்மாணமானது எதிர்பாராமல் அத்திவாரத்தின் கீழ் மண் நிலைமை மற்றும் பல வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டமை காரணமாக தாமதப்பட்டிருந்தது. ஆகவே ஒப்பந்த காலம் 2013 மார்ச 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| பொதி இலக்கம்/ செயற்திட்ட நடவடிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பௌதீக முன்னேற்றம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | % | % | % |
| எஸ்ஆர;/யூடபிள்யூஎஸ்/பிபீ2/எச்ஏஎம்/ஐசீபீ | | | |
| அம்பலாந்தோட்டையில் வலவை ஆற்று குறுக்காக உவர் நீர்த் தடுப்பு நிர்மாணமும் பூர்த்தியாக்கலும் | 100 | 90 | 10 |
| எஸ்ஆர;/யூடபிள்யூஎஸ்/பிஈ4/பீச்ஓஎஸ்/ஐசீபீ | | | |
| நீர் விநியோக குழாய்களை வழங்கி பொருத்தும் நீரகற்றும் தாங்கிகளை நிர்மாணித்தலும் | 100 | 100 | - |